# தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை.

## க.பொ.த.(உயர் தர)ப் பரீட்சை - 2019

## புள்ளியிடும் திட்டம்

## நாடகமும் அரங்கியலும் 58

## பழைய பாடத்திட்டம்

நாடகமும் அரங்கியலும் பாடநெறியானது
வினாப்பத்திரம் -I, வினாப்பத்திரம் -II என இரு பத்திரங்களை உள்ளடக்கியது.
பகுதி I 40 பல்தேர்வு வினாக்களையும் பகுதி II 06 வினாக்களையும் கொண்டுள்ளது.
பகுதி I 40 வினாக்களும் கட்டாய வினாக்களாகும்.
ஒவ்வொரு வினாக்களுக்கும் 5 விடைகள் காணப்படும்.
அவற்றுள் சரியான ஒரு விடையைத் தெரிவு செய்து இலக்கத்தை அடைப்புக் குறியினுள் இட வேண்டும்.

**வினாப்பத்திரம் -I**

பகுதி - I 40 பல்தேர்வு வினாக்களுக்கும் **40 புள்ளிகள்**

பகுதி - II 06 வினாக்களையுடையது.
A, B என இரு பிரிவுகளை உடையது.
பிரிவு A இலிருந்து 03 வினாக்களில் **இரண்டு** வினாக்களைத் தெரிவு செய்து விடை அளித்தல் வேண்டும். 2x15=30 புள்ளிகள்

பிரிவு B இலிருந்து 03 வினாக்களில் **இரண்டு** வினாக்களைத் தெரிவு செய்து விடை அளித்தல் வேண்டும். 2x15=30 புள்ளிகள்

**வினாப்பத்திரம் - II**

பகுதி - 1 40 பல்தேர்வு வினாக்களுக்கும் 40 புள்ளிகள்

பகுதி - 11 06 வினாக்களையுடையது.
A, B என இரு பிரிவுகளை உடையது.

பிரிவு A இலிருந்து 03 வினாக்களில் **இரண்டு** வினாக்களைத் தெரிவு செய்து விடை அளித்தல் வேண்டும். 2x15=30 புள்ளிகள்

பிரிவு B இலிருந்து 03 வினாக்களில் **இரண்டு** வினாக்களைத் தெரிவு செய்து விடை அளித்தல் வேண்டும். 2x15=30 புள்ளிகள்

# வினாப்பத்திரம் - I

| | |
|---|---|
| பகுதி - I பல்தேர்வு வினாக்கள் | 40 புள்ளிகள். |
| பகுதி - II | |
| பிரிவு A | 30 புள்ளிகள் |
| பிரிவு B | 30 புள்ளிகள் |
| மொத்தம் | 100 புள்ளிகள் |

# வினாப்பத்திரம் - II

| | |
|---|---|
| பகுதி - I பல்தேர்வு வினாக்கள் | 40 புள்ளிகள். |
| பகுதி - II | |
| பிரிவு A | 30 புள்ளிகள் |
| பிரிவு B | 30 புள்ளிகள் |
| மொத்தம் | 100 புள்ளிகள் |

இறுதிப்புள்ளி

| | |
|---|---|
| வினாப்பத்திரம் –1 | 100 புள்ளிகள் |
| வினாப்பத்திரம் –11 | 100 புள்ளிகள் |

இரு வினாப்பத்திரங்களின் புள்ளிகளையும் கூட்டி இரண்டால் வகுத்துப் பெறப்படும் புள்ளிகள் இறுதிப் புள்ளிகளாகும். 200/2 = 100 புள்ளிகள்

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் □ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ..........................................................................................
..........................................................................................
.......................................................................................... ✓ $\frac{4}{5}$

(ii) ..........................................................................................
..........................................................................................
.......................................................................................... ✓ $\frac{3}{5}$

(iii) ..........................................................................................
..........................................................................................
.......................................................................................... ✓ $\frac{3}{5}$

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. க.பொ.த.(உ. தர) மற்றும் தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடபட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.
2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை ○ அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

## புள்ளிப்பட்டியல் தயாரித்தல்

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். பத்திரம் I ற்கான பல்தேர்வு வினாப்பத்திரம் மட்டும் இருப்பின் புள்ளிகள் இலக்கத்திலும் எழுத்திலும் பதியப்பட வேண்டும். 51 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதிந்து எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.

ooo

AL/2019/58/T-I(OLD)

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

පැරණි නිර්දේශය/ பழைய பாடத்திட்டம்/ Old Syllabus

OLD

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2019 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2019 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2019

නාට්‍ය හා රංග කලාව I
நாடகமும் அரங்கியலும் I
Drama and Theatre I

58 T I

16.08.2019 / 0830 – 1140

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

| பகுதி I மொத்தப் புள்ளிகள் | |
|---|---|

சுட்டெண் : ....................................

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி I இலுள்ள **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதிய பின்னர், அதனை பகுதி II இன் விடைத்தாள்களுடன் இணைத்துக் கையளிக்குக.

※ பகுதி II இல் **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

※ **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடை எழுதுக.

※ இப்பகுதியில் 1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியானதும் பொருத்தமானதுமான விடையைத் தெரிந்தெடுத்து, அதன் **இலக்கத்தை அடைப்புக்குறியினுள்** எழுதுக.

**1.** “நாடகம் என்பது போலச்செய்தல்” எனக்குறிப்பிட்டவர்
(1) பேனாட்ஷா (2) அபிநவகுப்தர் (3) பிறட்லி
(4) அரிஸ்டோட்டல் (5) தனஞ்செயன் (......)

**2.** 16 ஆம் நூற்றாண்டு இத்தாலியிலும் பிரான்சிலும் தோன்றிய ஆற்றுகை வடிவம்
(1) வயாங்குலிற் (2) மயாங் (3) பலே
(4) ஒபேறா (5) லுத்துறுக் (......)

**3.** சாத்வீக பாவத்தில் ‘கண்ணீர் சொரிதல்’ என்பதைக் குறிக்கும் சமஸ்கிருதச் சொல்
(1) ஸ்வேத (2) அஸ்ர (3) ரோமான்சய
(4) வீஸ்மய (5) ஸதம்ப (......)

**4.** சமஸ்கிருத அரங்கில் பார்ப்போருக்குரிய இடத்தில் ஒவ்வொரு வர்ணத்தாருக்குமென தனித்தனியான நிறத்தூண்கள் ஒதுக்கப்பட்டிருக்கும். அவற்றுள் சத்திரியருக்கென ஒதுக்கப்படும் நிறத்தூணின் வர்ணம் யாது?
(1) வெள்ளை (2) நீலம் (3) மஞ்சள்
(4) சிவப்பு (5) கறுப்பு (......)

**5.** சமஸ்கிருத அரங்கில் பிரதான நடிப்பிடத்தைக் குறிக்கும் சொல் யாது?
(1) ரங்க பீடம் (2) ரங்க சீர்யம் (3) மத்தவராணி
(4) நேபத்ய கிரகம் (5) பூர்வரங்க (......)

**6.** மேல்வருவனவற்றுள் குரல்வழிச் சித்திரிப்பிற்கு ஒத்ததான அபிநயங்களிலொன்று எது?
(1) ஆங்கிகம் (2) வாச்சிகம் (3) சாத்வீகம்
(4) புவனம் (5) ஆகார்யம் (......)

7. மிருகபட்சி கொண்ட பாடுனர் குழாம் வருவது
(1) கிரேக்க அவலச்சுவையிலாகும்.
(2) கிரேக்க பழைய மகிழ்நெறியிலாகும்.
(3) கிரேக்க புதிய மகிழ்நெறியிலாகும்.
(4) ரோம மகிழ் நெறியிலாகும்.
(5) ரோம அவலச்சுவையிலாகும். (……)

8. கிரேக்க அவலச்சுவை நாடகமரபு தோற்றம் பெற்றதாகக் குறிப்பிடப்படும் அடித்தளம் யாது?
(1) கிரேக்க லெனே விழா
(2) தயோனிச சடங்கின் டித்திறாம்
(3) லிங்கப்பாடல்
(4) கோமஸ் எனப்படும் கேளிக்கை நிகழ்வு
(5) கோடக்ஸ் எனப்படும் நடனங்கள் (……)

9. கிரேக்க மகிழ்நெறிக் கட்டமைப்பில் வரும் அகொன் (agon) எனப்படுவது
(1) பாயிரம் ஆகும்.
(2) பிரவேசம் ஆகும்.
(3) முரண் ஆகும்
(4) காட்சிகள் ஆகும்.
(5) முன்னோக்கிய நகர்வு ஆகும். (……)

10. மேல்வருவோருள் யார் இல்லாது நாடக அளிக்கையொன்றைச் செய்ய முடியாது?
(1) நெறியாளர்
(2) நாடகாசிரியர்
(3) நடிகர்
(4) முகாமையாளர்
(5) தயாரிப்பாளர் (……)

11. மேல்வருவனவற்றுள் கற்பித நாடக மரபு (Romantic) பற்றிக் குறிப்பிடும் கூற்று எது?
(1) அதிகளவு உணர்ச்சி கொண்ட நடிப்பைக் கொண்டது.
(2) கடுமையான ஒழுக்கப்பண்புகளைக் கொண்டது.
(3) நல்லவர் நன்மைபெற தீயவர் தண்டனை பெறுவர் என்ற நம்பிக்கை கொண்டது.
(4) வாழ்வை இலட்சிய நோக்கில் பார்ப்பது.
(5) வாழ்வை யதார்த்த நோக்கில் பார்ப்பது. (……)

12. சோழர் காலத்தில் தஞ்சையில் நாடகம் ஆடுவதற்காக அமைக்கப்பட்ட அரங்கவெளி யாது?
(1) ஆடுகளம்
(2) கூத்தாட்டவை
(3) நாடகசாலை
(4) பண்ணை
(5) களரி (……)

13. பெரும்பாலும் நடிப்புப் பயிற்சியில் உள்ளத்தை வளப்படுத்தும் பயிற்சியாக அமைவது
(1) தளர்வுப் பயிற்சி
(2) கருத்தூன்றற் பயிற்சி
(3) சுவாசப் பயிற்சி
(4) பேச்சுப் பயிற்சி
(5) மூச்சுப் பயிற்சி (……)

14. அரங்கில் பார்ப்போருக்கு கட்புலரீதியான தாக்கத்தை ஏற்படுத்தும் துணைக்கலைகள்
(1) இசை, ஒளி
(2) குரல், ஒப்பனை
(3) காட்சி, சத்தம்
(4) காட்சி, இசை
(5) வேட உடை, ஒப்பனை (……)

15. அரங்கிலே பாத்திரமொன்றின் மனத்தடுமாற்ற நிலையைக் காட்டப் பயன்படுத்தும் ஒளிவிளக்கு
(1) பெருக்கொளி
(2) ஒளிவெள்ளம்
(3) பரப்பொளி
(4) பொட்டொளி
(5) கரை ஒளி (……)

16. பெரும்பாலும் ஒபேறா அளிக்கையின் தனித்துவமாக அமைவது
(1) காண்பியச் சித்திரிப்பு
(2) ஊமச் சித்திரிப்பு
(3) உணர்ச்சிவழிச் சித்திரிப்பு
(4) குரல்வழிச் சித்திரிப்பு
(5) உடல்வழிச் சித்திரிப்பு (……)

[பக். 3 ஐப் பார்க்க

17. தை நீராடல் சடங்காற்றுகை போல காணப்படும் இன்னொரு ஆற்றுகை மரபு
(1) வேட்டுவ வரி (2) ஆய்ச்சியர் குரவை (3) திருவெம்பாவை
(4) சூரன் போர் (5) வேலன் வெறியாடல் (......)

18. நடிக்கும்போது நடிகர் மேடைக்குள் பிரவேசிக்காது பேசும் மொழி
(1) தனிமொழி (2) புறச்சொல் (3) ஆகாயக் கிளர்த்தல்
(4) தன்னுரை (5) அகமொழி (......)

19. மகிடா சூரன், மகிசவர்த்தனி ஆகிய பாத்திரங்கள் இடம்பெறும் சடங்காற்றுகை
(1) யமசங்காரம் (2) மானம்பூ (3) கம்சன் போர்
(4) சூரன் போர் (5) கஜமுக அசுரன் போர் (......)

20. 'ரட்டயக்கும' எனும் சடங்காற்றுகை நிகழ்த்தப்படும் அரங்கவெளி
(1) கரலிய (2) களத்து மேடு (3) சன்னியக் வீதிய
(4) பூங்குடிசை (5) சுடலை (......)

21. கண்ணகி அம்மன் குளுத்திச் சடங்கு நடைபெறும் மாதம்
(1) தை (2) மாசி (3) பங்குனி
(4) சித்திரை (5) வைகாசி (......)

22. மேல்வருவனவற்றுள் கொட்டகைக் கூத்து பற்றிய **தவறான** கூற்று
(1) நடிப்பை விட இசை, நாடகத்தின் தன்மை மேலோங்கி நிற்கும்.
(2) தற்காலிக மருட்கைக் கதைப்பின்னல் காணப்படும்.
(3) மத்திய தர சமூகத்தையும் வாழ்க்கைக் கோலத்தையும் பிரதிபலிக்கும்.
(4) நாட்டுப் பற்று, சுதேச உணர்வு பற்றிய சமூகக் கதைகள் காணப்படும்.
(5) யதார்த்தபூர்வமான நடத்தைகளுக்கு அப்பாற் சென்று பாத்திரங்கள் படைக்கப்படும். (......)

23. 18 ஆம் நூற்றாண்டில் தோன்றியதும் கலைஞனின் பகுத்தறிவைவிட கற்பனைக்கு முக்கியத்துவம் வழங்கப்படுகின்றதும் காரண காரிய தொடர்பிற்கு முதன்மை **வழங்கப்படாததுமான** நாடக மரபு
(1) இயற்பண்பு வாதம் (2) யதார்த்த வாதம் (3) கற்பித வாதம்
(4) மிகைப்பாட்டு வாதம் (5) வெளிப்பாட்டு வாதம் (......)

24. மேல்வருவனவற்றுள் ஆற்றுகைக் கலைவடிவம் **அல்லாதது**
(1) ஓவியம் (2) இசை (3) நடனம்
(4) நாடகம் (5) வில்லுப்பாட்டு (......)

25. மேல்வருவனவற்றுள் எதன் காரணமாக நாவல் இலக்கியத்திலிருந்து சிறுகதை இலக்கியம் வேறுபடும்?
(1) மொழியை ஊடகமாகக் கொண்டிருத்தல்
(2) வாசிக்கத் தக்கதாய் இருத்தல்
(3) உடனடித் துலங்கலுக்கு உட்படாததாய் இருத்தல்
(4) சம்பவம், பாத்திரம் ஆகியன வரையறுக்கப்பட்டிருத்தல்
(5) எழுத்து வடிவில் அமைந்திருத்தல் (......)

26. மேடையின் காட்சிப்புலத்திற்கு அப்பால் இருக்கும் நடிகர்களையும் பொருட்களையும் பார்ப்போர் காணாதவாறு ஒழித்துவைக்கப் பயன்படும் திரை
(1) முன் திரை (2) பின் திரை (3) பக்கத் திரை
(4) வான் திரை (5) குறுக்குத் திரை (......)

27. நாடகமொன்றில் பாத்திரங்களின் உணர்வுகளை வெளிப்படுத்த இசைக்கப்படும் இசை
(1) கரு இசை (2) பண்பாட்டு இசை (3) பின்னணி இசை
(4) மனநிலை இசை (5) குறியீட்டு இசை (......)

28. ஆரம்பத்தில் வட்டக்களரியிலும் பின்னர் கொட்டகைகளிலும் ஆடப்பட்ட நாடக வடிவம்
(1) நாட்டை (2) விலாசம் (3) அர்ச்சுனன் தபசு
(4) வேடன் பறி (5) வீரபத்திரர் ஆட்டம் (......)

**29.** தனது சமூக மோதுகைநிலைச் சித்திரிப்பு நாடகங்களில் விவாதத்தை முக்கிய விடயப் பொருளாகப் பேசியவர்
(1) க. கணபதிப்பிள்ளை (2) ம. சண்முகலிங்கம் (3) தில்லைநாதன்
(4) இ. முருகையன் (5) அம்பி (……)

**30.** கூத்தின் ஆட்டங்களும் இரண்டு ஆற்றுகை மரபுகளும் இணைந்தபோதே விலாசம் எனப்படும் நாடக மரபு தோன்றியதாகக் குறிப்பிடுவர். இங்கு குறிப்பிடப்படும் இரண்டு ஆற்றுகை மரபுகளுமாவன,
(1) கீர்த்தனை நாடக மரபும் இசை நாடக மரபுமாகும்.
(2) நாமா மோடியும் இசை நாடக மரபுமாகும்.
(3) தெருக்கூத்தும் சபா நாடக மரபுமாகும்.
(4) பார்சி மராட்டிய நாடக மரபும் கீர்த்தனை நாடக மரபுமாகும்.
(5) பார்சி மராட்டிய நாடக மரபும் நாமா மோடியுமாகும். (……)

**31.** நாடக ஆற்றுகை மரபில் பாடலே அரங்காக அமைந்துள்ள நாடக மரபு
(1) பள்ளு நாடக மரபு (2) நொண்டி நாடக மரபு (3) குறவஞ்சி நாடக மரபு
(4) தெருக்கூத்து மரபு (5) பார்சி நாடக மரபு (……)

**32.** முதன்முதலில் பெண்கள் நடிப்பதற்கு அனுமதி அளித்த நாடக மரபு
(1) கிரேக்கம் (2) ரோம் (3) சமஸ்கிருதம்
(4) சீனா (5) யப்பான் (……)

**33.** நடிப்புத் தொழிலின் பாதுகாப்பிற்காக அரசு வகை செய்தது என்பதற்கு இந்திய மரபில் சான்று பகர்வது கௌடில்யரின்
(1) மனு சாஸ்திரமாகும். (2) பஞ்சராத்திரமாகும். (3) பரத சாஸ்திரமாகும்.
(4) அர்த்த சாஸ்திரமாகும். (5) தூத வாக்கியமாகும். (……)

**34.** யப்பானிய நோ நாடகத்தில் வரும் கியோ (kyo) பாத்திரம் எதனைக் குறிக்கும்?
(1) தெய்வம் (2) மனிதன் (3) பெண்
(4) பைத்தியம் (5) பேய் (……)

**35.** சேக்ஸ்பியரின் நாடகங்கள் பெரும்பாலும் மேடையேற்றப்பட்டது
(1) புரோசீனியம் மேடைகளிலாகும். (2) வட்ட மேடைகளிலாகும்.
(3) துருத்திய மேடைகளிலாகும். (4) சுழல் மேடைகளிலாகும்.
(5) சதுர மேடைகளிலாகும். (……)

**36.** மாதவி ஆடிய பதினொரு வகை ஆடல்களுள் 'துடியாடல்' எதனைக் குறிக்கும்?
(1) சிவன் முப்புரங்களை எரித்தமை
(2) விஷ்ணு அவுணர்களை அழித்தமை
(3) முருகன் சூரனைக் கொன்றமை
(4) அயிராணி உழத்தி உருவத்தோடு ஆடியமை
(5) திருமகள் அவுணர்களைத் தோற்கடித்தமை (……)

**37.** படத்தில் காட்டப்பட்டுள்ள இந்திய நடன வகை எது?
(1) மணிப்புரி
(2) ஒடிசி
(3) ஆந்திர நாட்டியம்
(4) மோகினி ஆட்டம்
(5) கதக்



(……)

**38.** படத்தில் காட்டப்பட்டுள்ள தேசிய மரபு இந்தியாவின் எந்தப் பிராந்தியத்தில் ஆடப்படும்?
(1) தமிழ்நாடு
(2) கேரளா
(3) ஆந்திரா
(4) நாகலாந்து
(5) கர்நாடகா



(......)

**39.** படத்தில் காட்டப்பட்டுள்ள கூத்து மரபு யாது?
(1) மகிடிக் கூத்து
(2) வசந்தன் கூத்து
(3) நாட்டை கூத்து
(4) குடமுதற் கூத்து
(5) வீரபத்திரர் ஆட்டம்



(......)

**40.** படத்தில் காட்டப்பட்டுள்ள காட்சியை தனது அளிக்கைக்காக உருவாக்கியவர் யார்?
(1) பீற்றர் புறூக்
(2) அன்ரூ அன்ரொயின்
(3) அன்ரனி ஆர்த்தோ
(4) எட்வின் பிஸ்கேற்றர்
(5) மக்ஸ் ரைன்ஹாற்



(......)

✻✻

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

අ.පො.ස. (උ.පෙළ) විභාගය/ க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2019

පැරණි නිර්දේශය/ பழைய பாடத்திட்டம்

| විෂය අංකය பாட இலக்கம் | 58 | විෂයය பாடம் | நாடகமும் அரங்கியலும் |
|---|---|---|---|

ලකුණු දීමේ පටිපාටිය/புள்ளி வழங்கும் திட்டம்

I පත්‍රය/பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 4 | 11. | 4 | 21. | 5 | 31. | 5 |
| 02. | 3 | 12. | 3 | 22. | 3 | 32. | 3 |
| 03. | 2 | 13. | 2 | 23. | 3 | 33. | 4 |
| 04. | 4 | 14. | 5 | 24. | 1 | 34. | 3 |
| 05. | 1 | 15. | 4 | 25. | 4 | 35. | 3 |
| 06. | 2 | 16. | 4 | 26. | 3 | 36. | 3 |
| 07. | 2 | 17. | 3 | 27. | 4 | 37. | 2 |
| 08. | 2 | 18. | 3 | 28. | 2 | 38. | 3 |
| 09. | 3 | 19. | 2 | 29. | 1 | 39. | 1 |
| 10. | 3 | 20. | 4 | 30. | 4 | 40. | 1 |

✪ විශේෂ උපදෙස්/ விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට/ ஒரு சரியான விடைக்கு 01 ලකුණු බැගින්/புள்ளி வீதம்

මුළු ලකුණු/மொத்தப் புள்ளிகள் 1 × 40 = 40

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

පැරණි නිර්දේශය/பழைய பாடத்திட்டம்/Old Syllabus

OLD

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2019 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2019 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2019

නාට්‍ය හා රංග කලාව I
நாடகமும் அரங்கியலும் I
Drama and Theatre I

58 T I

## பகுதி II

**அறிவுறுத்தல்கள் :**

※ பிரிவு **A** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் பிரிவு **B** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் தெரிவுசெய்து, **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

### பிரிவு A

**1.** (i) 'நாடக ஆற்றுகை' என்ற எண்ணக்கருவை உதாரணங்கள் தந்து விளக்குக.
(ii) நாடக ஆற்றுகையொன்றின் உருவாக்கப் படிமுறைகளை விவரிக்குக.
(iii) அரங்கப் பட்டறையொன்றில் உமது சொந்த அனுபவத்தை ஆற்றுகை செய்த சந்தர்ப்பமொன்றை விளக்குக. (5 × 3 = 15 புள்ளிகள்)

**2.** ஐரோப்பிய - அமெரிக்க அரங்கப் போக்கில் 1950 களின் பின்னர் மேல்வரும் அரங்கவியலாளர் ஒவ்வொருவரும் ஏற்படுத்திய மாற்றங்களை விவரிக்குக.
(i) அகஸ்தா போல்
(ii) பீற்றர் புறூக்
(iii) றிச்சட் செக்னர் (5 × 3 = 15 புள்ளிகள்)

**3.** மேல்வரும் அரங்குகளின் அளிக்கை முறைமை, பார்வையாளர் துலங்கல் என்பவற்றை விளக்குக.
(i) சடங்கரங்கு
(ii) நவீன அரங்கு
(iii) தெருவெளி அரங்கு (5 × 3 = 15 புள்ளிகள்)

### பிரிவு B

**4.** வெவ்வேறு வடிவமுடைய அரங்கவெளிகள் **ஐந்தினைப்** பருமட்டாக வரைந்து, அவை ஒவ்வொன்றிலும் ஆற்றுவோர், பார்வையாளர், ஊடாட்டம் ஆகியன எவ்வாறு அமையும் என்பதை விளக்குக.(15 புள்ளிகள்)

**5.** ஈழத்தில் தமிழ் அரங்கின் மேம்பாட்டிற்குச் சவாலாக உள்ள காரணிகள் **ஐந்தைக்** குறிப்பிட்டு, அவற்றை வெற்றிகொள்வதற்கான ஆலோசனைகளை முன்வைக்குக. (15 புள்ளிகள்)

**6.** மேல்வருவனவற்றுள் **மூன்றிற்குச்** சிறுகுறிப்பு எழுதுக.
(i) பாதல் சர்க்காரின் மூன்றாவது அரங்கு
(ii) யதார்த்த நடிப்பு
(iii) நிருத்த, நிருத்திய, நாட்டிய
(iv) கவிதையியல்
(v) வானொலி நாடகம் (5 × 3 = 15 புள்ளிகள்)

※※※

01.

i. **நாடக ஆற்றுகை என்ற எண்ணக்கருவை உதாரணங்கள் தந்து விளக்குக.**

- நாடக இலக்கியமொன்றை மேடைக்குரிய உருவமாக்கல் என்ற அடிப்படையில் விளங்கப்படுத்துதல் எதிர்பார்க்கப்படுகின்றது.
- ஆற்றுகைக் கலைகள் பல இவற்றுள் நாடக ஆற்றுகை தனித்துவமானது.
- நாடக ஆற்றுகை பார்வையாளர், நடிகர் நேரடித் தொடர்பு கொள்ளும் ஓர் வடிவம்.
- நாடக ஆற்றுகை யதார்த்த / யதார்த்த விரோத முறைகளில் ஆற்றுகை செய்யப்படுவது.
- இது நடிப்பையும், நடிப்பு நுட்பங்களையும் பிரதானமாகக் கொண்டது மேடை மொழிக்கூடாக வருவது போன்ற விடயங்களை அடிப்படையாகக் கொண்டு உதாரணங்காட்டி விளக்குதல் எதிர்பார்க்கப் பெறுகிறது.

| | |
|---|---|
| எண்ணக்கரு விளக்கம் | 02 புள்ளிகள் |
| உதாரணம் காட்டி விளக்குதல் | 03 புள்ளிகள் |

(05 புள்ளிகள்)

ii. **நாடக ஆற்றுகையொன்றின் உருவாக்கப் படிமுறைகளை விளக்குக.**

- நாடக ஆற்றுகையொன்றின் உருவாக்கப் படிமுறையானது ஆற்றுகைக்கு முன், ஆற்றுகையின் போது, ஆற்றுகைக்குப் பின் இடம்பெறும் செயற்பாடுகள் என்ற அடிப்படையில் விளங்கப்படுத்துதல் எதிர்பார்க்கப்படுகின்றது.
- எண்ணக்கரு உருவாக்கம்
- நாடக பாடத்தெரிவு
- நடிபாகமளித்தலும் பயிற்சி வழங்கலும்.
- ஒத்திகைகளை மேற்கொள்ளல்.
- ஆற்றுகை
- ஆற்றுகைக்குப் பின்னரான செயற்பாடுகள் போன்ற படிமுறைகளை அடிப்படையாகக் கொண்டு விவரித்தல் வேண்டும்.
- நியம, நியமமில் படிமுறைகளையும் கவனத்தில் கொண்டு புள்ளிகளை வழங்கவும்.

(05 புள்ளிகள்)

iii. **அரங்கப் பட்டறையொன்றில் உமது சொந்த அனுபவத்தை ஆற்றுகை செய்த சந்தர்ப்பமொன்றை விளக்குக.**

பட்டறைச் சூழலில் தயாரித்த ஆற்றுகைக்கான பின்னணி நிலைமை, ஆற்றுகை செய்யப்பட்ட விடயம், அது எவ்வாறு ஆற்றுகை செய்யப்பட்டது என்ற அடிப்படையில் விளக்குதல் எதிர்பார்க்கப்படுகின்றது.
உதாரணமாக,

- பட்டறைச் சூழலும் அனுபவமும்
- தயாரிப்புப் படிமுறை
- தயாரிப்பில் பட்டறையில் பங்கு கொண்டவர்களின் பங்களிப்பு
- ஆற்றுகை
- ஆற்றுகையில் பெற்றுக்கொண்ட அனுபவம் போன்ற விடயங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குதல் வேண்டும்.

(05 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

02. **ஐரோப்பிய - அமெரிக்க அரங்கப் போக்கில் 1950 களின் பின்னர் மேல்வரும் அரங்கவியலாளர் ஒவ்வொருவரும் ஏற்படுத்திய மாற்றங்களை விவரிக்குக.**

ஒவ்வொரு அரங்கவியலாளர்களும் என்ன பின்னணியில் மாற்றத்தைக் கொண்டு வந்தார்கள்

1. என்ன மாற்றம்
2. மாற்று அரங்கின் முறைமை என்பன சுருக்கமாக விபரிப்பது எதிர்பார்க்கப்படுகின்றது.

உதாரணம்,

i. **அகஸ்தா போல்**

- பார்ப்போர் தமது சமூகத் தளைகளிலிருந்தும், அகத் தளைகளிலிருந்தும் தம்மை விடுவித்துக் கொள்ள அரங்கை சாதகமாக்கினார்.
- ஒடுக்கப்பட்டோரின் ஆயுதமாக அரங்கை மாற்றினார்.
- படிம அரங்கு, விவாத அரங்கு, உடனடி அரங்கு, கண்ணுக்குப் புலனாகாத அரங்கு எனும் அரங்கு முறைகளை கையாண்டு தளைநீக்க செயற்பாடுகளை மேற்கொண்டார்.
- அரங்கு இலக்குப் பார்வையாளரை நோக்கிச் சென்றது.
- பார்ப்போரை அரங்கில் பங்குகொள்ள வைத்தலே இவரின் முக்கிய செயற்பாடு.

(05 புள்ளிகள்)

ii. **பீற்றர் புறூக்**

- இவர் அரங்கப் போக்கில் வெறு (Empty Space) வெளி பற்றிய எண்ணக்கருவை உருவாக்கினார்.
- அரங்குதாக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக நமக்கு முன்னே தோற்றுவிக்கப்படும் மனப்பதிவுகளை அரங்கின் மனப்பதிவு ஆக்கினார்.
- அரங்கு மொழிக்கு அப்பால் சென்று பார்வையாளரிடம் தாக்கத்தை ஏற்படுத்துவதற்காக ஒலிகளையும் கையாண்டார்.
- கீழைத்தேய, ஆபிரிக்க அரங்க நடைமுறைகளை உள்வாங்கி ஆற்றுகைகளை மேற்கொண்டார். இது அரங்கோடு பார்வையாளரை ஒன்றிணைக்க வைத்தது.
- உலக யுத்த அழிவைப் பொதுமைப்படுத்திக் காட்டுவதற்காக மகாபாரதக் கதையினை 9 மணித்தியால தொலைக்காட்சி நாடகமாகத் தயாரித்து உலகப் புகழ் பெற்றார்.
- வெறும் வெளியை ஆற்றுகை காண்பியங்கள் ஊடாக கனதியுள்ளதாக மாற்றினார்.

(05 புள்ளிகள்)

iii. **றிச்சட் செக்னர்**

- அரங்கில் ஆற்றுகை என்ற விடயப் பொருளை முன்வைத்தார்.
- சூழலியல் அரங்கு என்ற எண்ணக்கருவைத் தோற்றுவித்தார்.
- ஆற்றுகை முறைக்கும் பண்பாட்டுக்கும் தொடர்பு உள்ளது என்று கருதிய இவர் பண்பாடு, சடங்குகளோடு தொடர்புடைய நுட்பங்களைக் கையாண்டு அரங்கப் பார்வையாளர்களை ஒன்றிக்க வைத்தார்.
  உதாரணம் : சடங்கு, கலை, விளையாட்டுக்கள், மகிழ்விப்புக்கள்.
- அரங்கை மக்கள் மையப்படுத்தியதாக வளர்த்தார்.
- நாடகம் மனித ஆற்றுகை முறைமைகளில் ஒன்று எனக் கருதிய இவர் மனிதன், சூழல், அரங்கு எனும் மூன்றையும் இணைத்து நாடகங்களைப் படைத்தார். முழுக் கிராமமே அரங்காகியது.
- பார்ப்போர் பங்குபற்றும் முறையை இவர் விரும்பினார்.
- அரங்கை உலக சந்தைக்கு ஏற்றதாக மாற்றுவதற்கு ஆற்றுகைக் கற்கைகள் என்கின்ற கற்கை நெறியை உருவாக்கினார்.

(05 புள்ளிகள்)

( மொத்தம் 15 புள்ளிகள்)

**03. மேல்வரும் அரங்குகளின் அளிக்கை முறைமை, பார்வையாளர் துலங்கல் என்பவற்றை விளக்குக.**

i. **சடங்கரங்கு**

- சடங்கானது நம்பிக்கையுடன் ஒரு வேண்டுதலை அடிப்படையாகக் கொண்டு நிகழ்த்தப்படுவது.
- சடங்கானது இடத்துக்கு இடம் பிரதேசத்திற்குப் பிரதேசம் வேறுபட்ட முறையில் நிகழ்த்தப்படும்.
- பூ மரம் ஒன்று குறித்த நிலைமைக்குள் செல்வதற்காக எடுக்கும் எத்தனங்களையும் பின்னைய சூழலையும் உடல் மொழி, சொல்லாடல், பாத்திர சிருஸ்டிப்பு, தட்டு முட்டுக்கள், கைப்பொருட்கள் போன்றன சிருஸ்டிக்கப்படும் முறைமை.
- சடங்கரங்கில் பக்திப்பரவசம், உருவேறுதல், கலையாடுதல், கட்டுச் சொல்லுதல், பார்வையாளர் துலங்கல், பங்கு கொள்ளல், பிரச்சினை விடுவிப்பு, நம்பிக்கை, ஒன்றிணைதல் போன்ற அம்சங்களை இனங்காணக்கூடியதாக இருத்தல்.

இவை பற்றி பரீட்சார்த்திகள் விளக்குதல் எதிர்பார்க்கப்படுகிறது. (05 புள்ளிகள்)

ii. **நவீன அரங்கு**

- யதார்த்த, யதார்த்தம் அல்லாத அரங்குகளை உள்ளடக்கியதாக அமையும்.
- படச்சட்ட மேடையைப் பயன்படுத்தியதாகவும், பார்ப்போரை விழிப்படைய படச்சட்ட மேடையை உடைத்து வைப்பதற்காக புதிய உத்திகளை உள்வாங்குவதாகவும் அமையும்.
- பார்ப்போரை ஒன்றிக்க வைப்பதும் பார்ப்போரை விழிப்படைய, சிந்திக்க வைப்பதும் நவீன அரங்கின் கோட்பாடாகும்.

இவை பற்றி பரீட்சார்த்திகள் விளக்குதல் எதிர்பார்க்கப்படுகின்றது.
(05 புள்ளிகள்)

iii. **தெருவெளி அரங்கு**

- சமூகக் குழுமங்கள் பல்வேறு மோதுகை நிலைப் பிரச்சினைகளை எதிர்நோக்கிய சூழலில் தோற்றம் பெற்றது.
- தெருக்களுக்கு அண்மித்த வெளிகள் ஆற்றுகை வெளிகளாக அமையும்.
- ஊர்வலமாக வருதல், மக்களைக் கூவி அழைத்தல், ஓர் இடத்தில் நடாத்துதல், பங்கு கொள்ளல் என்பன இதன் முக்கிய அம்சங்களாகும்.

- விளிம்பு நிலை மக்களை அவர்களது சூழலில் அவர்களுக்குரிய அரங்க மூலங்களுடன் சந்திப்பது.
- வேகமும், கவர்ச்சியும் வியப்பூட்டலும் நிறைந்ததாக இவ் ஆற்றுகை முறைமை அமையும்.
- பார்ப்போரை பங்கு பற்றுனர்களாகக் கொண்டு இவ்வரங்கு நிகழ்த்தப்படும்.

இவை பற்றி பரீட்சார்த்திகள் விளக்குதல் எதிர்பார்க்கப்படுகிறது.

(05 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

## பிரிவு B

**04. வெவ்வேறு வடிவமுடைய அரங்கவெளிகள் ஐந்தினைப் பருமட்டாக வரைந்து, அவை ஒவ்வொன்றிலும் ஆற்றுவோர், பார்வையாளர், ஊடாட்டம் ஆகியன எவ்வாறு அமையும் என்பதை விளக்குக.**

கிரேக்க அரங்கு
முன் துருத்திய அரங்கு
வட்டக்களரி /கூத்தரங்க வெளி
மகிடிக் கூத்தரங்க வெளி
படச்சட்ட அரங்கு
இருபக்க / முப்பக்க அரங்குகள்
அசையும் அரங்குகள் (Mobile Theatre)
நோ அரங்கு
கபுகி அரங்கு
சிங்கள அரங்குகள்

இவை போன்று ஐந்து வெவ்வேறு வகையான அரங்க வெளிகளைப் பருமட்டாக வரைவர்.

**கிரேக்க அரங்கு**

- கிரேக்க அரங்கு சடங்குப் பின்புலத்தினூடு தோற்றம் பெற்றது.
- ஆரம்பத்தில் ஊர்வலப் பண்புடன் நிகழ்த்தப்பட்டு, பின், குறித்த இடத்தில் ஆற்றுகை செய்யப்பட்டது.
- தயோனீசியஸ் ஆலய முன்றலில் எளிமையாக ஆரம்பிக்கப்பட்டு பின் மலையடிவாரத்தில் வட்ட வடிவ ஆடுகளம் ஒன்றில் 15,000 பேர் கொண்ட பார்ப்போரைக் கொண்ட வட்டப் பேரரங்காக வளர்ச்சி அடைந்தது.
- மலைச் சரிவுகளில் வரிசை வரிசையாக அமைந்த படிக்கட்டுக்களில் இருந்து பார்த்தனர்.
- வேட முகப் பாவனை இடம்பெற்றது.
- சடங்காக இருக்கும்போது பார்ப்பார் ஊடாட்டம் நெருக்கமானதாகவும் நாடகமாக மாறும்போது நெருக்கம் குறைந்ததாகவும் அமையலாயிற்று.

**முன் துருத்திய அரங்கு**

- சேக்ஸபியர் காலத்தில் தோற்றம் பெற்ற அரங்காகும்.
- இவ் அரங்கு அரைச்சுற்று வட்டமானது. இதன் ஒரு பகுதி மக்களுக்கு உள்ளே சென்று துருத்திக் கொண்டு நிற்கும்.
- பார்வையாளர்களாக பொதுமக்களும், உயர் வர்க்கத்தினரும் மூன்று பக்கமும் சுற்றிவர இருந்து பார்ப்பர்.
- பார்வையாளர்களுக்கும் நடிகருக்குமான ஊடாட்டம் குறைவாகவே காணப்பட்டது.

**வட்டக்களரி**

- ஈழத்தமிழர் பண்பாட்டில் கூத்துக்கள் ஆடப்படும் அரங்காகும்.
- வட்டமாக அமைந்த அரங்கில் ஊர்மக்கள் நடிக்க, அவ்வூர் மக்களும் ஏனைய ஊர் மக்களும் பார்வையாளர்களாகக் கலந்து கொள்வர்.
- சுற்றிவர ஆடப்படும். பார்வையாளர் சுற்றிவர அமர்ந்தோ நின்றோ பார்ப்பார்கள்.
- பகட்டான உடை, உரத்துப் பாடல் என்பவற்றுடன் சபையோர் நடுவே நிற்க இந்நிகழ்வு இடம்பெறும்.
- பார்வையாளரால் காசுமாலை போடல், சால்வை அணிவித்தல் என்பன இடம்பெறும்.
- பார்வையாளரும் பங்கு கொள்ள நடிகரும் பார்வையாளரும் வந்து உறவாடி மகிழ்வர்.
- இதில் ஊடாட்டம் மிகவும் நெருக்கமானதாகக் காணப்படும்.

**மகிடிக்கூத்து**

- இதில் இருவகை அரங்கு காணப்படும்.
- பெருங்காட்சிப் பண்பு உள்ளதாகவும் திறந்த வெளியில் இடம்பெறுவதுமாகும்.
- ஊர் மக்கள் நடிகராக இடம்பெற ஊரவரும் ஏனையவர்களும் பார்வையாளர்களாகக் கலந்து கொள்வர்.
- பார்வையாளர்களுடனான ஊடாட்டம் காணப்படும்.

**படச்சட்ட அரங்கு**

- நவீன அரங்குடன் தோற்றம் பெற்ற அரங்காகும்.
- ஒரு பக்கப் பார்வையாளரைக் கொண்டது.ம் மூன்று பக்கம் அடைக்கப்பட்டதுமாகும்.
- பார்வையாளர்கள் ஒரு பக்கமாகவே அமர்ந்திருப்பர்.
- அரங்க மருட்கையும் ஒன்றித்தலும் இவ் அரங்க வெளியுடன் அறிமுகமாகியது.

5 படங்கள் பருமட்டாக வரைந்து விளக்கியிருப்பின் 5 × 3 = 15 புள்ளிகள்

(மொத்தம் 15 புள்ளிகள்)

**05. ஈழத்தில் தமிழ் அரங்கின் சவாலாக உள்ள காரணிகள் ஐந்தினைக் குறிப்பிட்டு, அவற்றை வெற்றி கொள்வதற்கான ஆலோசனைகளை முன்வைக்க.**

**அ. சமூகக் காரணிகள்**

- நாடகத்திற்கும் நாடகத்தில் ஈடுபடுபவர்களுக்கும் சமூகத்தில் அங்கீகாரம் கிடைப்பதில்லை.
- கோயில் திருவிழாக்களுக்கு இருக்கும் முக்கியத்துவத்தைப் போல நாடகத்திற்கும் சமூகம் முக்கியத்துவம் வழங்குவதில்லை.
- நாடகத்தைக் காட்ட சமூகம் ஆர்வம் காட்டாமை.
- போட்டிக்காக மாத்திரம் நாடகங்கள் தயாரிக்கப்படுகின்றமை.
- நாடகச் சூழலிலிருந்து நல்ல நாடகத் தயாரிப்பாளர், நெறியாளர் உருவாகாமை.
- நாடகத்தை கோட்பாடு ரீதியாக மட்டுமே போதிக்கின்றமையும் கற்கின்றமையும்.

**ஆ. பொருளாதாரக் காரணிகள்**

- நாடகத் தயாரிப்பிற்கான செலவு அதிகம்.
- நாடகத்தை தயாரிக்க தனவந்தர்கள் முன்வராமை.
- அரச நிறுவனங்களும் நாடகத் தயாரிப்பிற்குப் பெரும் பண ஒதுக்கீடுகள் வழங்காமை.

**இ. அரசியல் காரணிகள்**

- அரசு நாடகத்தை வளர்க்க முன்வராமை.
- நாடகத்தை வளர்க்கும் பண்பாட்டுத் திணைக்களங்கள் நாடகத்தை வளர்க்க புதிய திட்டங்களை தீட்டாமை.
- அரசு தலையிட்டு சில நாடகங்களைத் தணிக்கை செய்தல்.
- நாடகவியலாளர்களுக்கிடையே குரோதப் போட்டி மனப்பாங்கு காழ்ப்புணர்ச்சிகள் காணப்படுகின்றமை.
- முறையற்ற விமர்சனப் போக்கு

**ஈ. பண்பாட்டுக் காரணிகள்**

- பெண்கள் நாடகத்தில் நடிக்கப் பண்பாட்டுக் காரணிகள் விடுவதில்லை.
- நாடகத்தை பண்பாட்டு, சமூக மாற்றத்திற்கான காரணியாகப் பின்பற்றாமை, அது சார்ந்த பண்பாட்டு அறிவூட்டல் வழங்கப்படாமை.
- பண்பாட்டில் வாழ்வோர் தங்களது பண்பாட்டு அறிக்கைகளில் நாட்டம் காட்டாமை.
- தமிழ் நாடகங்கள் ஏனைய எலக்ரோனிக் மீடியாக்களோடு போட்டி போட முடியாமலும் அதனை வெற்றி கொள்ளத்தக்க விதங்களைக் கண்டுபிடிக்கப்படாமலும் இருப்பது போன்ற காரணிகளை தமது அனுபவத்தினூடாக எடுத்துக்காட்டி ஆலோசனைகளையும் முன்வைக்கலாம்.

  காரணிகளை முன்வைப்பதற்கு 10 புள்ளிகள்

  ஆலோசனைகளை முன்வைப்பதற்கு 05 புள்ளிகள்

( மொத்தம் 15 புள்ளிகள்)

**06. மேல்வருவனவற்றுள் மூன்றிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.**

i. **பாதல் சர்க்காரின் மூன்றாவது அரங்கு**

- நடிகரையும், பார்ப்போரையும் இணைப்பதன் மூலம் அரங்க வெளியின் தொடர்பாடலை அர்த்தப்படுத்தும் மூன்றாவது அரங்கு அறிமுகம் செய்யப்பட்ட முறைமை.
- பார்ப்போரைப் பங்கு கொள்ளச் செய்வது, சுயாதீனமான தளை நீக்கச் சூழலைக் கொண்டு வருவது இவ் அரங்கின் முக்கிய பணிகளாகும்.
- வெளியைப் பயன்படுத்தும் முறை இதன் பண்புகளுள் ஒன்றாகும்.

(05 புள்ளிகள்)

ii. **யதார்த்த நடிப்பு**

- யதார்த்த நடிப்பு தெளிவுப்படுத்தப்படல். இயல்பு நிலைச் சித்திரிப்பின் வெளிப்பாடாக அமைகின்றமை.
- யதார்த்த நடிப்பை நெறிப்படுத்துவதில் ஸ்ரெனிஸ்லாவஸ்கி முன்னோடியாக திகழ்ந்தார்.
- முறைமைக் கோட்பாட்டின் மூலம் ஸ்ரெனிஸ்லாவஸ்கி இவ் நடிப்பு முறைமையை வலுப்படுத்தினார்.
- நடிப்பில் உண்மைத் தன்மை, பாத்திரமாக வாழ்தல், ஒன்றிணைதல் என்பன முக்கியமானவை.
- இப்சனது நாடகங்களில் யதார்த்த நடிப்பு மேலோங்கப் பெற்றது.
- ஈழத்தில் கலையரசு சொர்ணலிங்கம் இவ் நடிப்பை வலியுறுத்தினர்.

(05 புள்ளிகள்)

iii. **நிருத்த, நிருத்திய, நாட்டிய**

**நிருத்த**
- உடல் அசைவுகள் மூலம் வெளிப்படுத்தும் தூய நடனம்.
- நிருத்திய, நாட்டியத்துக்கு அடிப்படையாக அமைவது.
- கருத்துப் புலப்பாடு அற்றது.

**நிருத்திய**
- உடல் அசைவுகளுடன் பாவ வெளிப்பாடு கொண்டது.
- கருத்துப் புலப்படும் நடனம்.
- அங்கீக, ஆகார்ய, சாத்வீக அபிநயங்களின் பயன்பாட்டைக் கொண்டது.

**நாட்டிய**

- நாட்டிய என்பது நாடகத்தைக் குறிக்கும். (தாள, லய, பாவம் இணைந்தது)
- உடல் அசைவு, பாவ வெளிப்பாட்டுடன் இணைந்து கொள்வது
- நால்வகை அபிநயங்களின் பயன்பாட்டைக் கொண்டது.

(05 புள்ளிகள்)

iv. **கவிதையியல்**

- அரிஸ்டோட்டிலினால் எழுதப்பட்ட நூல்
- கி.மு 4 ஆம் நூற்றாண்டில் படைக்கப்பட்ட கிரேக்க நூல்.
- இலக்கியத் திறனாய்வில் தோன்றிய முதற் பெருநூலாக உள்ளது கவிதையின் தோற்றம், வளர்ச்சி, கவிதையின் வரலாறு பற்றிக் கூறும்.
- குறிப்பாக திறஜெடியில் நாடகக் கூறுகளை கதைப்பின்னல், சிந்தனை, பர்திரம், மொழி, காட்சி, இசைப் பற்றிக் கூறுவது.

(05 புள்ளிகள்)

v. **வானொலி நாடகம்**

- செவி வழிநுழையும் இசையும், ஒலியும், உரையும் இணைந்து உருவாக்கப்படும் படைப்பாக்கம்.
- கேட்டு மனதில் உணர்ந்து தரிசிக்கும் படைப்பு.
- கதை, உரையாடல், இசை, சத்தங்கங்கள் மூலம் நகர்த்தப்படும்.
- கலையரங்கத்திலிருந்தே அலைவழி நுகரப்படுவது.
- நேயரின் கற்பனை உருவாக்கும் படிமத்தின் மூலம் கதை விளங்கி ரசிக்கப்படும்.
- பாத்திரங்களின் சொல்லாடல், உணர்ச்சி வெளிப்பாடுகள் என்பன மூலம் சம்பவச் சூழல் மக்களின் மனக்கண்களில் கற்பனை செய்யப்படும்.

(05 புள்ளிகள்)

(மொத்தம் 5X3= 15 புள்ளிகள்)

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

පැරණි නිර්දේශය/ பழைய பாடத்திட்டம்/ Old Syllabus

OLD

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2019 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2019 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2019

නාට්‍ය හා රංග කලාව II
நாடகமும் அரங்கியலும் II
Drama and Theatre II

58 T II

17.08.2019 / 0830 – 1140

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

| பகுதி I மொத்தப் புள்ளிகள் | |
|---|---|

சுட்டெண் : ....................................

**அறிவுறுத்தல்கள் :**

✳ பகுதி I இலுள்ள **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதிய பின்னர், அதனை பகுதி II இன் விடைத்தாள்களுடன் இணைத்துக் கையளிக்குக.

✳ பகுதி II இல் **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

✳ **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடை எழுதுக.

✳ இப்பகுதியில் **1** தொடக்கம் **40** வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியானதும் பொருத்தமானதுமான விடையைத் தெரிந்தெடுத்து, அதன் **இலக்கத்தை அடைப்புக்குறியினுள்** எழுதுக.

**1.** கற்பித மனோரதியவாத நாடகங்களுடன் தொடர்புடைய மேலைத்தேய நாடகவியலாளர்
(1) ஹென்றி பெக் (2) அலெக்சாண்டர் டூமோஸ் (3) ஹென்றிக் இப்சன்
(4) ஸ்றின்ட்பேர்க் (5) சேக்ஸ்பியர் (......)

**2.** காவிய அரங்கை ஐரோப்பிய அரங்கில் முதன்மைப்படுத்தியவர்
(1) ஜின்போல் சாத்ரே (2) ஜின் அனூல் (3) ஜின் கெனற்
(4) பிஸ்காட்டர் (5) மக்ஸ் ப்ஃறிஸ் (......)

**3.** 'கற்கை நெறியாக அரங்கு' எனும் நூலைத் தொகுத்து, பதிப்பித்தவர்
(1) சு. வித்தியானந்தன் (2) கா. சிவத்தம்பி (3) காரை சுந்தரம்பிள்ளை
(4) வி.சி. கந்தையா (5) இ. பாலசுந்தரம் (......)

**4.** 'வகிபாகச் சித்திரிப்பு' (Creating a role) எனும் நூலின் ஆசிரியர்
(1) அரிஸ்டோட்டல் (2) எமிலிசோலா
(3) கலையரசு சொர்ணலிங்கம் (4) சூரியநாராயண சாஸ்திரியார்
(5) ஸ்ரனிஸ்லவ்ஸ்கி (......)

**5.** 'மதங்கசூளாமணி' எனும் நாடக நூலை எழுதியவர்
(1) சூரியநாராயண சாஸ்திரியார் (2) சுவாமி விபுலானந்தர்
(3) காரை சுந்தரம்பிள்ளை (4) எம்.எஸ். இராமையா
(5) தெ.பொ. மீனாட்சி சுந்தரம்பிள்ளை (......)

**6.** சிங்கள மக்கள் மத்தியில் காணப்படும் 'சன்னியக்கும' இன் செல்வாக்கைப் பெற்ற சிங்கள நாடக வடிவம்
(1) நூர்த்தி (2) நாடகம (3) சொக்கரி (4) கோலம் (5) மினர்வா (......)

**7.** உணர்ச்சிகள் உடலில் வெளிப்படுத்தப்படுவதை அரிஸ்டோட்டல் எவ்வாறு குறிப்பிடுகிறார்?
(1) கதாசிஸ் (2) அனுபாவம் (3) ரச உணர்வு (4) மெய்ப்பாடு (5) மெய்யுணர்வு (......)

**8.** யூலியஸ்சீசர் நாடகக் கட்டமைப்பில் திருப்புமுனையை ஏற்படுத்திய பாத்திரம்
(1) புரூட்டஸ் (2) மார்க் அன்ரனி (3) லெப்பிட்டஸ்
(4) சீசர் (5) கயஸ்கா (......)

**9.** மேல்வருவோருள் யதார்த்தமோடி நாடகக்காரர் **அல்லாதவர்** யார்?
(1) மாக்ஸிம் கோர்க்கி (2) அன்ரன் செக்கோவ் (3) பேர்ணாட்ஷா
(4) மேயர் ஹோல்ட் (5) ஹென்றிக் இப்சன் (......)

**10.** மேல்வருவனவற்றுள் நாடகக்கலை தொடர்பில் **பொருத்தமற்ற** கூற்று எது?
(1) மோதுகையினைக் கொண்டிருக்கும்.
(2) உயிரோட்டத்தைக் கொண்டிருக்கும்.
(3) கதைக் கட்டமைப்பைக் கொண்டிருக்கும்.
(4) நாடகபாடம் இலக்கியம் ஒன்றினைக் கொண்டிருக்கும்.
(5) பார்ப்போரின் பிரசன்னமின்றிய செயற்பாட்டைக் கொண்டிருக்கும். (......)

**11.** யாழ்ப்பாணத்தில் வட்டுக்கோட்டைப் பிரதேசத்தில் ஆடப்பட்டுவரும் கூத்துமரபு
(1) சிந்துநடைக் கூத்து (2) நாட்டைக் கூத்து (3) வடமோடிக் கூத்து
(4) வசந்தன் கூத்து (5) தென்மோடிக் கூத்து (......)

**12.** சிங்கள நாடக அரங்கில் டவர்ஹோல் நாடக மரபாகக் கொள்ளப்படுவது
(1) நாடகம (2) கோலம் (3) மினர்வா
(4) நூர்த்தி (5) கொட்டகை (......)

**13.** மேல்நாட்டு நாடக அளிக்கை மரபில் ஒளியமைப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியவர்
(1) மக்ஸ்றெயின் கார்ட் (2) மேயர் ஹோல்ட் (3) பிஸ்கேற்றர்
(4) கோடன் கிறெய்க் (5) அடொல்ப் அப்பியா (......)

**14.** மத்தியகால 'Every man' நாடகம் மேல்வருவனவற்றுள் எதற்குள் அடங்கும்?
(1) அற்புத நாடகம் (2) திருமுறை நாடகம்
(3) பொதுவணக்கமுறை நாடகம் (4) ஒழுக்கப் பண்பு நாடகம்
(5) கிராமிய நாடகம் (......)

**15.** வில்லியம் சேக்ஸ்பியரின் 'ஹம்லட்' நாடகம் என்பது ஒரு
(1) அவலச்சுவை நாடகமாகும். (2) மகிழ்நெறி நாடகமாகும்.
(3) கற்பித நாடகமாகும். (4) மிகைப்பாட்டு நாடகமாகும்.
(5) வரலாற்று நாடகமாகும். (......)

**16.** போட்டோல்ட் பிறெ.்.ட் முன்வைத்த 'அஸ்டாக்' என்ற பாத்திரம் இடம்பெறும் நாடகம்
(1) வெண்கட்டி வட்டம் (2) மத கறேஜ் (3) கலிலியோ
(4) திறி பெனி ஒபெறா (5) பால் (......)

**17.** 'நாடக மும்மை' என்பதில் உள்ளடங்குவன யாவை?
(1) கதைப்பின்னல், இடம், சூழ்நிலை
(2) இடம், செயல், சூழ்நிலை
(3) காலம், இடம், சூழ்நிலை
(4) காலம், இடம், இயக்கம்
(5) இயக்கம், இடம், சூழ்நிலை (......)

**18.** மிருச்சகடிக நாடகத்தின் ஆசிரியர்
(1) பாசர் (2) ஸ்ரீஹர்சர் (3) பவபூதி (4) சூத்திரகர் (5) காளிதாசர் (......)

**19.** 'சடங்கிலிருந்து நாடகம் வரை' என்ற நூலின் ஆசிரியர் யார்?
(1) கா. சிவத்தம்பி
(2) காரை. செ. சுந்தரம்பிள்ளை
(3) மெற்றாஸ் மெயில்
(4) அருணா செல்லத்துரை
(5) சி. மௌனகுரு (......)

**20.** வசந்தன் கூத்து **பயிலப்படாத** பிரதேசம்
(1) முல்லைத்தீவு (2) மட்டக்களப்பு (3) கிளிநொச்சி
(4) மலையகம் (5) யாழ்ப்பாணம் (......)

**21.** புலம்பெயர் நாடுகளில் உடனடி அரங்கத் தயாரிப்பில் ஈடுபட்டு வரும் தமிழ் நெறியாளர்
(1) மாவை. நித்தியானந்தன் (2) புதுசு இரவி (3) அ. தாசீசியஸ்
(4) க. பாலேந்திரா (5) இளைய பத்மநாதன் (......)

**22.** மலையகத்தில் 'பொன்னர் சங்கர்' பெரும்பாலும் ஆடப்படும் காலப்பகுதி
(1) மாசி, பங்குனி (2) சித்திரை, வைகாசி (3) ஆனி, ஆடி
(4) ஆவணி, புரட்டாதி (5) ஐப்பசி, கார்த்திகை (......)

**23.** க. கணபதிப்பிள்ளையின் 'தவறான எண்ணம்' ஒரு
(1) தழுவல் நாடகமாகும்.
(2) வரலாற்று நாடகமாகும்.
(3) சமூக விமர்சன நாடகமாகும்.
(4) அரசியல் விமர்சன நாடகமாகும்.
(5) மொழிபெயர்ப்பு நாடகமாகும். (......)

**24.** கல்விசார் அரங்கை முன்னெடுப்பதற்கு உந்துசக்தியாக விளங்கியவர் யார்?
(1) கலையரசு சொர்ணலிங்கம்
(2) கா. சிவத்தம்பி
(3) இ. சிவானந்தன்
(4) நா. சுந்தரலிங்கம்
(5) க. கணபதிப்பிள்ளை (......)

**25.** குழந்தை ம. சண்முகலிங்கத்திற்கு நாடக இலக்கிய கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்த பல்கலைக் கழகம் எது?
(1) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
(2) தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
(3) கிழக்குப் பல்கலைக்கழகம்
(4) கொழும்புப் பல்கலைக்கழகம்
(5) பேராதனைப் பல்கலைக்கழகம் (......)

**26.** சமகாலப் பிரச்சினைகளுக்குக் கூத்தின் வடிவத்தினைப் பயன்படுத்தியவர் யார்?
(1) மகாகவி உருத்திரமூர்த்தி (2) இளைய பத்மநாதன் (3) பேராசிரியர் தில்லைநாதன்
(4) நா. சுந்தரலிங்கம் (5) பௌசுல் அமீர் (......)

**27.** பா நாடகங்களிலும் மொழிபெயர்ப்பு, தழுவல் நாடகங்களிலும் ஈடுபாடு கொண்டவர் யார்?
(1) இ. முருகையன் (2) க. பாலேந்திரா (3) அ. தாசிசியஸ்
(4) க. சிதம்பரநாதன் (5) பாலசிங்கம் (......)

**28.** இ. சிவானந்தன் அவர்களால் எழுதப்பெற்ற நாடக ஆய்வு நூல் எது?
(1) ஈழத்து தமிழ் நாடக அரங்கு
(2) சமூக மாற்றத்துக்கான அரங்கு
(3) வட இலங்கை நாட்டார் அரங்கு
(4) பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் நாடகம்
(5) இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ் நாடக அரங்கம் (……)

**29.** கண்ணாடி வார்ப்புகள், யுகதர்மம் போன்ற நாடகங்களைத் தயாரித்தவர் யார்?
(1) அம்பி (2) வி.எம். குகராஜா (3) க. பாலேந்திரா
(4) சொக்கலோ சண்முகம் (5) என்.கே. ரகுநாதன் (……)

**30.** அரசியல், சமூக, பண்பாட்டு ஒழுங்கு முறைகளுக்கு எதிரான கட்டவிழ்ப்பு அரங்கை அறிமுகம் செய்தவர் யார்?
(1) நா. சுந்தரலிங்கம் (2) க. சிதம்பரநாதன் (3) எஸ்.ரி. அரசு
(4) புதுவை அன்பன் (5) வி.எம். குகராஜா (……)

**31.** மேல்வருவனவற்றுள் சங்ககால பாணருக்குரிய வாத்தியம் எது?
(1) யாழ் (2) முழவு (3) கோடு (4) வயிர் (5) கிணை (……)

**32.** நாடக அமைப்பை தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம் என்றவாறு விவரிக்கும் நூல் எது?
(1) திருக்குறள் (2) பரிபாடல் (3) தொல்காப்பியம்
(4) பத்துப்பாட்டு (5) கலித்தொகை (……)

**33.** திருக்குற்றாலக் குறவஞ்சியில் 'உலா' என்பது எதனைக் குறிக்கும்?
(1) குறத்தி குறி சொல்லல் (2) குற்றாலநாதர் வருகை
(3) வசந்தவல்லி, குறத்தி சந்திப்பு (4) சிங்கன் சிங்கிக்கு இடையிலான காதல்
(5) சிங்கன் வேட்டையாடுதல் (……)

**34.** மேல்வருவனவற்றுள் பார்சி அரங்கம் தொடர்பில் **பொருத்தமற்ற** கூற்று யாது?
(1) 1890 களில் தோன்றியது.
(2) எடுத்துரைக்கும் அரங்க நிலையில் வெளிப்படும்.
(3) மூடப்பட்ட படச்சட்ட அரங்கில் நடிக்கப்படும்.
(4) பம்பாய் வழியாக தமிழ்நாட்டிற்கு அறிமுகமாகியது.
(5) முப்பரிமாணக் காட்சித் திரைகளைக் கொண்ட மருட்கை அரங்காகக் காணப்படும். (……)

**35.** 1990களில் உணர்ச்சியைப் பிரதானப்படுத்தி எழுதப்பட்ட நாடகம்
(1) வையத்துள் தெய்வம் (2) அருமை நண்பன் (3) அன்னை இட்ட தீ
(4) தாயுமாய் நாயுமானார் (5) உறவுகள் (……)

**36.** மேல்வருவனவற்றுள் பம்மல் சம்பந்த முதலியார் பற்றிய **தவறான** கூற்று யாது?
(1) 90 இற்கும் மேற்பட்ட நாடகங்களை எழுதியுள்ளார்.
(2) நடிப்பதற்குக் கல்வியறிவுடையவர்களை இணைத்துக்கொண்டார்.
(3) பாய்ஸ் நாடகக் கம்பனியை ஆரம்பித்து வைத்தார்.
(4) வசன முறையில் அமைந்த நாடகங்களைப் படைத்துப் புகழீட்டினார்.
(5) சுகுணவிலாச சபையை நிறுவி நாடகங்களை நடித்தார். (……)

**37.** தமிழ்நாட்டில் 'ஆழி' நாடகக் குழுவைத் தோற்றுவித்தவர்
(1) வேலு சரவணன் (2) மு. இராமசுவாமி (3) பிரளயன்
(4) குணசேகரன் (5) சே. இராமானுஜம் (……)

**38.** இலங்கையில் 19 ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் ஆங்கில மொழி நாடகங்களைத் தயாரித்த கல்லூரி **அல்லாதது**

(1) கொழும்பு றோயல் கல்லூரி
(2) புனித தோமஸ் கல்லூரி
(3) கொழும்பு வெஸ்லி கல்லூரி
(4) கொழும்பு ஆனந்தாக் கல்லூரி
(5) கொழும்பு நாலந்தாக் கல்லூரி

(......)

**39.** படத்தில் காட்டப்பட்டுள்ள நாடக வகை யாது?



(1) அவலச்சுவை
(2) மகிழ்நெறி
(3) வரலாறு
(4) சற்றயர்
(5) கற்பிதம்

(......)

**40.** படத்தில் காட்டப்பட்டுள்ள நாடகாசிரியர் யார்?



(1) பேர்ணாட்ஷா
(2) அன்ரன் செக்கோவ்
(3) எமிலிசோலா
(4) யூரிப்பிடிஸ்
(5) ஸ்ரனிஸ்லவ்ஸ்கி

(......)

* *

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

අ.පො.ස. (උ.පෙළ) විභාගය/ க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2019

පැරණි නිර්දේශය/ பழைய பாடத்திட்டம்

විෂය අංකය பாட இலக்கம்: 58 විෂයය பாடம்: நாடகமும் அரங்கியலும்

## ලකුණු දීමේ පටිපාටිය/புள்ளி வழங்கும் திட்டம்

### I පත්‍රය/பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 2 | 11. | 3 | 21. | 3 | 31. | 1 |
| 02. | 4 | 12. | 4 | 22. | 1 | 32. | 5 |
| 03. | 2 | 13. | 4 | 23. | 4 | 33. | 2 |
| 04. | 5 | 14. | 4 | 24. | 2 | 34. | 2 |
| 05. | 2 | 15. | 1 | 25. | 3 | 35. | 3 |
| 06. | 4 | 16. | 1 | 26. | 2 | 36. | 3 |
| 07. | 1 | 17. | 4 | 27. | 1 | 37. | 1 |
| 08. | 2 | 18. | 4 | 28. | 5 | 38. | 5 |
| 09. | 4 | 19. | 5 | 29. | 3 | 39. | 4 |
| 10. | 5 | 20. | 4 | 30. | 2 | 40. | 4 |

✪ විශේෂ උපදෙස්/ விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට/ ஒரு சரியான விடைக்கு 01 ලකුණු බැගින්/புள்ளி வீதம்

මුළු ලකුණු/மொத்தப் புள்ளிகள் 1 × 40 = 40

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka
සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

පැරණි නිර්දේශය/ பழைய பாடத்திட்டம்/ Old Syllabus

OLD

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2019 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2019 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2019

නාට්‍ය හා රංග කලාව II
நாடகமும் அரங்கியலும் II
Drama and Theatre II

58 T II

## பகுதி II

**அறிவுறுத்தல்கள் :**

✻ பிரிவு **A** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் பிரிவு **B** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் தெரிவுசெய்து, **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

### பிரிவு A

**1.** (i) கிரேக்கத்தின் நாடக வகைகள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(ii) மேலே (i) இல் குறிப்பிட்டவற்றுள் எவையேனும் **இரண்டு** வகை நாடகங்களுக்கிடையிலான வேறுபட்ட சிறப்பியல்புகளை முன்வைக்குக. (5 புள்ளிகள்)

(iii) 'அன்ரிகனி' நாடகத்தை அடிப்படையாகக் கொண்டு உலக அரங்கில் கிரேக்க நாடக மரபின் முக்கியத்துவத்தை விளக்குக. (7 புள்ளிகள்)

**2.** (i) 'அபத்த நாடகம்' என்பதனால் கருதப்படுவது யாது? (3 புள்ளிகள்)

(ii) ஈழத்தில் அபத்த நாடகம் அறிமுகமாகிய பின்புலத்தை விவரிக்குக. (5 புள்ளிகள்)

(iii) 'அபசுரம்' நாடகத்தில் பாத்திரங்களின் செயல்கள், சொல்லாடல்கள் ஆகியவற்றுக்கூடாக அபத்தம் வெளிப்படும் விதத்தை உதாரணங்களுடன் விளக்குக. (7 புள்ளிகள்)

**3.** (i) 'ஒரு பாவையின் வீடு' நாடகத் தலைப்பின் ஊடாக புரிந்துகொள்ளத்தக்கது யாது? (3 புள்ளிகள்)

(ii) யதார்த்த குறியீட்டுப் படிமங்கள் 'ஒரு பாவையின் வீடு' நாடகத்தினூடாக வெளிப்படும் விதம் பற்றி விவரிக்குக. (5 புள்ளிகள்)

(iii) 'ஒரு பாவையின் வீடு' நாடகத்தில் நோறா, கிறிஸ்ரினா ஆகிய பாத்திரங்கள் வாழ்வை எதிர்கொள்ளும் விதத்தை உதாரணங்களுடன் விளக்குக. (7 புள்ளிகள்)

### பிரிவு B

**4.** உமது பிரதேசத்தில் பயில்நிலையில் உள்ள மரபுவழிக் கூத்து ஒன்றின் ஆற்றுகை முறைமையினை விவரித்து, குழுமச் செயற்பாட்டில் பங்கு கொள்ளல் நடவடிக்கையில் அது பெறும் இடத்தினை மதிப்பிடுக. (15 புள்ளிகள்)

**5.** 1970 தொடக்கம் 1980 வரையான காலப்பகுதியில் வாழ்ந்த **இரண்டு** நாடக ஆளுமைகளைக் குறிப்பிட்டு, அவர்கள் அரங்கச் செல்நெறியில் திருப்புமுனையை ஏற்படுத்திய விதத்தையும் சமூக முக்கியத்துவத்தை மாற்றியமைத்த முறையையும் விளக்குக. (15 புள்ளிகள்)

**6.** மேல்வருவனவற்றுள் **மூன்றிற்குச்** சிறுகுறிப்பு எழுதுக.

(i) யப்பானிய நோ
(ii) தமிழக தெருக்கூத்து
(iii) குளுர்த்திச் சடங்கு
(iv) ரட்டயக்கும சடங்கு
(v) மத்தியகால திருமறை நாடகங்கள்

(5 × 3 = 15 புள்ளிகள்)

பிரிவு A இலிருந்து இரண்டு வினாக்களையும்
பிரிவு B இலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து,
எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி II
## பிரிவு A

01.

i. **கிரேக்கத்தின் நாடக வகைகள் மூன்றினைக் குறிப்பிடுக.**

1. திறஜெடி / அவலச்சுவை
2. கொமடி / மகிழ்நெறி
3. சற்றயர்

(03 புள்ளிகள்)

ii. **மேலே (i) இல் குறிப்பிட்டவற்றுள் எவையேனும் இரண்டு வகை நாடகங்களுக்கிடையிலான வேறுபட்ட சிறப்பியல்புகளை முன்வைக்க.**

- கிரேக்க நாடக வகைகளில் எவையேனும் இரண்டின் தனித்துவமான வேறுபட்ட சிறப்பியல்புகளை இனங்கண்டு முன்வைப்பது எதிர்பார்க்கப்படுகின்றது.

உதாரணமாக
- திறஜெடி நாடகத்தின் வேறுபட்ட சிறப்பியல்புகள்
  1. தெய்வங்களுக்கும் மனிதனுக்கும் இடையில் உள்ள முரண் / மோதுகை பற்றிப் பேசும்.
  2. நாடகம் முழுவதிலும் விரவிக் கிடக்கும் கழிவிரக்கம், பயம் ஆகிய உணர்ச்சிகளைக் கொண்டு பார்ப்போரிடத்தே உணர்ச்சிக் கிளர்வை (கதாசிஸ்) ஏற்படுத்தும்.......

- கொமடி நாடகத்தின் வேறுபட்ட சிறப்பியல்புகள்
  1. கற்பனையை விட சமகால விடயங்களுக்கு முக்கியத்துவம் அளித்தமை.
  2. கேலி, கிண்டலினூடே அரசியல் நிலைமைகளை விமர்சித்தமை......

- சற்றயர் நாடகத்தின் வேறுபட்ட சிறப்பியல்புகள்
  1. அங்கதச் சுவையுடையது
  2. பாதி மனிதப் பண்பும் பாதி மிருகப் பண்பும் கொண்ட பாத்திரங்களைக் கொண்டமை.

இவை போன்ற வேறுபட்ட சிறப்பியல்புகளை முன்வைத்திருப்பின் புள்ளிகள் வழங்குக.

(05 புள்ளிகள்)

iii. **'அன்ரிகனி' நாடகத்தை அடிப்படையாகக் கொண்டு உலக அரங்கில் கிரேக்க நாடக மரபின் முக்கியத்துவத்தை விளக்குக.**

- அன்ரிகனி நாடகப் படைப்பாக்கச் சிறப்புக்களை எடுத்துக் காட்டி உலக அரங்கில் கிரேக்க நாடக மரபின் முக்கியத்துவத்தை விளக்குவது எதிர்பார்க்கப்படுகின்றது.

- அன்ரிகனி நாடகத்தின் கதை, பாத்திரப்படைப்பு, சொல்லாடல்கள், மோதுகைகள், பார்ப்போரிடத்தில் ஏற்படுத்தும் தாக்கங்கள் இவை போன்ற விடயங்கள் உலக அரங்கில் கிரேக்க மரபின் முக்கியத்துவத்திற்கும் தொடர்ச்சிக்கும் காரணமாக அமைகின்றன என்பதை எடுத்துக்காட்டி விளக்கியிருப்பின் புள்ளிகள் வழங்குக.

(07 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

**02.**

i. **'அபத்த நாடகம்' என்பதால் கருதப்படுவது யாது?**

- அபத்தவாதக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு ஆற்றுகை செய்யப்படும் நாடகங்கள் 'அபத்த நாடகங்கள்' என அழைக்கப்படுகின்றன.
- அபத்தவாதக் கோட்பாடு – அர்த்தமற்றதாகத் தோன்றுவதையும் நுணுகி, அதன் இருப்பைத் தேடுகின்ற போது, அது மிகவும் அர்த்த பூர்வமானது என்பதைக் காட்டுவதாகும்.
- சக மனிதர்களோடு மனிதர்கள் கொண்டுள்ள தொடர்பாடலில் போதாமை இருத்தல், தனது தலை விதியைத் தான் கையாள முடியாமல் இருக்கிறேன் என்ற நிலை.....

  இவ்வாறான எண்ணக்கரு வெளிப்படுமாறு ஆற்றுகை செய்யும் நாடகங்கள் 'அபத்த நாடகங்கள்' என அழைக்கப்படுகின்றன.

  உதாரணமாக : Samuel Becket இன் கொடோவுக்காகக் காத்திருத்தல் (Waiting for Godot)

(03 புள்ளிகள்)

ii. **ஈழத்தில் அபத்த நாடகம் அறிமுகமாகிய பின்புலத்தை விவரிக்குக.**

- இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் ஏற்பட்ட சிந்தனை மாற்றம் உலக நாடகப் போக்கில் மாற்றத்தை ஏற்படுத்தியது.
- மனித இருப்பு என்பது அர்த்தமற்றதாக / கேள்விக்குறியாக நோக்கப்பட்ட நிலை அபத்த நாடகம் தோன்றக் காலாக அமைந்தது.
- இவ்வாறான பின்புலத்தில் ஈழத்தில் மேலைத்தேய நாடகங்களைக் கற்றவர்களும், நவீன நாடக உத்தி முறைகளையும் நாடக நுணுக்கங்களையும் தமிழ் நாடகங்களில் கையாளும் முயற்சிகளில் ஈடுபட்டவர்களின் வருகையும்.
- நாடகம் சமூக மாற்றச் சாதனமாக அமைய வேண்டும் என்ற சிந்தனைகள்.
- 1970 களில் தமிழ் – சிங்கள நாடகக் கலைஞர்களின் சுதேசிய சிந்தனை கொண்ட சுய படைப்புக்கள் எழுந்தமை.
- அதன் காரணமாக நாடக உள்ளடக்கம், உருவத்தில் ஏற்பட்ட மாற்றம்.
- இடது சாரிச் சிந்தனை கொண்டவர்களின் ஈடுபாடுகள்.
- தமிழர் மத்தியில் காணப்பட்ட தீர்க்கப்படாத பிரச்சினைகளும், அதன் காரணமாக எழுந்த அரசியல் ரீதியான, சமய ரீதியான அணுகுமுறைகள் மீதெழுந்த அதிருப்திகள்.

- இவ் மனோபாவத்தை வெளிப்படுத்த ஏற்ற அரங்க வடிவமாக அபத்த நாடக வடிவம் காணப்பட்டமை.

(இவை போன்ற 5 விடயங்கள் தொடர்புறுமாறு பின்புலத்தை விளக்குவது எதிர்பார்க்கப்படுகிறது)

(05 புள்ளிகள்)

iii. **அபசுரம் நாடகத்தில் பாத்திரங்களின் செயல்கள், சொல்லாடல்கள் ஆகியவற்னூடாக அபத்தம் வெளிப்படும் விதத்தை உதாரணங்களுடன் விளக்குக.**

- காரண காரிய தொடர்பற்ற தன்மை.
- மனிதத் தொடர்பாடலின் போதாமை
- இயந்திரப் பாங்கான அசைவுகள்.
- அர்த்தமற்ற மொழிக் கையாளுகை.
- இருப்பைத் தேடும் நிலை / வெறுமை

போன்ற விடயங்களின் அடிப்படையில் விளக்குதல்.

உதாரணம் :

பொதுவர் காகிதங்களை அடுக்குதல், அவை பறத்தல் - செயல் / அருளர் - தியாகர் - சிவாயரின் உரையாடல்கள் (சிவாயர் - என்ர குருநாதர் சொன்னவர்) / அருளர் - தியாகரின் - மேடைப் பேச்சுக்கள் இவையனைத்தும் பொதுவரின் பிரச்சினையைத் தீர்க்காத தன்மையை விவரித்தல்.

பொருத்தமுற செயல்கள், சொல்லாடல்கள் உதாரணங்களுடன் விளக்கம் செய்யப்பட்டிருப்பின் புள்ளிகளை வழங்குக.

(07 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

**03.**

i. **'ஒரு பாவையின் வீடு' நாடகத் தலைப்பின் ஊடாக புரிந்துகொள்ளத்தக்கது யாது?**

- நோறா அவரது கணவர் ஹெல்மர் சொல்வதைச் செய்யும் கிளியாக அவரின் விருப்பு வெறுப்புக்களுக்கேற்ப இயங்கும் ஒரு இயந்திரம் போன்று கையாளப்பட்டமையைக் குறியீட்டுப் படிம நிலைப்படுத்துவதாக 'ஒரு பாவையின் வீடு' தலைப்பு அமைகின்றது.

(03 புள்ளிகள்)

ii. **யதார்த்த குறியீட்டுப் படிமங்கள் ஒரு 'பாவையின் வீடு' நாடகத்தினூடாக வெளிப்படும் விதம் பற்றி விவரிக்குக.**

- ஒரு பாவை வீடு நாடகத்தில் வரும் சொல்லாடல்கள், காட்சி அமைப்புக்கள், மேடைப் பொருட்கள் போன்றவற்றிற் கூடாக குறியீட்டுப் படிமங்கள் வெளிப்பட்டு நிற்கின்ற விதம் தொடர்பாக விளக்கியிருத்தல் வேண்டும்.

**உதாரணம் :-**

மேடைப்பொருட்கள்

நத்தார் மரம்

ஆடு கதிரை

விநோத உடை

எரிந்த மெழுகுதிரிக் கட்டை

கணப்படுப்பு

இவை போன்ற பொருத்தமான உதாரணங்களை எடுத்து விளக்கியிருப்பின் புள்ளிகள் வழங்குக.

(05 புள்ளிகள்)

**iii. ஒரு பாவையின் வீடு நாடகத்தில் நோறா, கிறிஸ்ரீனா ஆகிய பாத்திரங்கள் வாழ்வை எதிர்கொள்ளும் விதத்தை உதாரணங்களுடன் விளக்குக.**

- ஒரு பாவை வீடு நாடகத்தில் நோறா, கிறிஸ்ரீனா ஆகிய பாத்திரங்களின் தியாக உணர்வினையும் அவர்கள் தங்களது வாழ்க்கையினை நிலைப்படுத்த முனையும் சந்தர்ப்பங்களையும் இனங்கண்டு விளக்குதல் எதிர்பார்க்கப்படுகின்றது.

உதாரணம் :

நோறா கணவனுக்குத் தெரியாது கடன் பெறுவது அதனை அடைப்பதற்காக எடுக்கும் முயற்சிகள் அது போன்று கிறிஸ்ரீனா உறவுகளுக்காக காதலைத் தியாகம் செய்வதும், பின்னர் தனித்து வாழ நினைப்பது போன்ற சந்தர்ப்பங்களைக் குறிப்பிடலாம்.

(இதனை ஒத்த விடைகளையும் கவனத்திற் கொள்க.)

(07 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

## பிரிவு B

**04. உமது பிரதேசத்தில் பயில்நிலையில் உள்ள மரபுவழிக் கூத்து ஒன்றின் ஆற்றுகை முறைமையினை விவரித்து, குழுமச் செயற்பாட்டில் பங்குகொள்ளல் நடவடிக்கையில் அது பெறும் இடத்தினை மதிப்பிடுக.**

- மாணவர் தம் பிரதேசத்தில் பயில்நிலையில் ஆடும் மரபு வழிக் கூத்து ஒன்றினை இனங்கண்டு குறிப்பிடுவர். பின்னர் அதன் ஆற்றுகை முறையினை விவரிக்க வேண்டும்.

### ஆற்றுகை முறை

**ஆற்றுகைக்கு முன்**

- முன்னீடுகாரர் தலைப்படல்
- அண்ணாவியார் தெரிவு
- கூவி அழைத்தல்
- கலைஞர்கள் ஓர் இடத்தில் ஒன்று திரண்டு ஒரு பொது இடத்தில் நடுநிலை அண்ணாவி முன்னிலையில் சட்டம் கொடுத்தல்.
- பின்னர் நாட்டுக்கூத்தாடுதல்.
- கிழமைக் கூத்தாடுதல்
- சதங்கை அணி விழா
- அடுக்குப் பார்த்தல்
- ஒப்பனை, வேடவுடை விதானிப்பாளர் தெரிவு இடம்பெறல்
- அதற்கான கலைஞர்கள் தெரிவு செய்யப்படல்.
- அரங்கேற்றத்திற்கு தயாராகுதல்.

**ஆற்றுகையின் போது**

- கூத்தை மேடையில் பூசையோடும், ஆசிரியப்பா, வாழி பாடலோடும் விருந்தோடும் ஆரம்பித்தல்.
- நடிகர்கள் வரவுக்கு வந்து நடிக்கத் தொடங்குதல்.
- ஒவ்வொரு பாத்திரங்களினதும் வரவும் இடம்பெறும்.
- கதை, பிற்பாட்டுக்காரர்களாலும் அண்ணாவியாராலும் நடத்திச் செல்லப்படும்.

- கூத்தினைப் பார்க்க அனைவரும் ஒன்று படல்.
- கூத்தாடும் கலைஞர்களுக்கும் அண்ணாவியாருக்கும் கௌரவிப்பு நடைபெறுதல். ( காசு மாலை, சால்வையணிதல்)
- பெண்கள் கூத்தர்களுக்கு தட்டு மிளகு தண்ணீர் கொடுத்தல்.
- உறவினர், நண்பர்கள் சில பாத்திரங்கள் மேடையில் தோன்றும் போது வெடி கொளுத்தி ஆரவாரித்தல்.
- பிற்பாட்டில் தவறு ஏற்படும்போது பார்வையாளரும் சேர்ந்து பாடுதல், அடியெடுத்துக் கொடுத்தல்.

**ஆற்றுகையின் பின்**

- களரிப் பூசை வைத்தல்
- வீட்டுக்கு வீடு ஆடுதல்
- நடிகர்களுக்கு கண்ணூறு கழித்தல்.
- அண்ணாவியார் வீடு சென்றாடுதல்.
- அண்ணாவியாருக்கு முறை செய்தல்.
- ஆற்றுகையின் பின் பாத்திரப் பெயர் கொண்டு நடிகரை அழைத்தல்
  (நொண்டி-பொன்னர், வீமன் - சங்கர்)
- கூத்து முடிந்த பின் அதன் விமர்சனங்களை வீடுகளில் குழுமியிருந்து கதைத்தல்.

இவை போன்ற விடயங்களை குழுவாகச் சேர்ந்து செயற்படும் விதம் பங்கு கொள்ளல் முறைமையை என்பவற்றை மையப்படுத்தி விவரித்தலுக்கு புள்ளிகள் வழங்கலாம்.

(15 புள்ளிகள்)
(மொத்தம் 15 புள்ளிகள்)

**05. 1970 தொடக்கம் 1980 வரையான காலப்பகுதியில் வாழ்ந்த இரண்டு நாடக ஆளுமைகளைக் குறிப்பிட்டு, அவர்கள் அரங்கச் செல்நெறியில் திருப்புமுனையை ஏற்படுத்திய விதத்தையும் சமூக முக்கியத்துவத்தை மாற்றியமைத்த முறையையும் விளக்குக.**

- 1970 தொடக்கம் 1980 வரையான காலப்பகுதியில் வாழ்ந்த இரண்டு ஆளுமைகளைக் குறிப்பிடல்.
- மேற்குறிப்பிட்ட ஆளுமைகள் அரங்க செல்நெறியில் திருப்புமுனையை ஏற்படுத்திய முறைமை, சமூகத்தில் அவை பெறும் முக்கியத்துவம் என்பன வெளிக்காட்டப்படுவது எதிர்பார்க்கப் பெறுகின்றது.

(15 புள்ளிகள்)
(மொத்தம் 15 புள்ளிகள்)

**06. மேல்வருவனவற்றுள் மூன்றிற்கு சிறுகுறிப்பு எழுதுக.**

i. **யப்பானிய நோ**

- யப்பானிய புரதான நாடக வடிவமாகும்.
- நோ என்பதன் பொருள் மேலான ஒன்று என்பதாகும் அதாவது தேர்ச்சிப்பலம், புத்திமகிமை என்பவற்றைக் குறிக்கும்.
- இதன் ஆற்றுகை முறைமை, அரங்கு, பார்ப்போர் என்பவற்றை எடுத்து விளக்கப்படுதல் எதிர்பார்க்கப் படுகின்றது.

(05 புள்ளிகள்)

ii. **தமிழக தெருக்கூத்து**

- புராண, இதிகாசக் கதைகளை அடிப்படையாகக் கொண்டது.
- ஆடல், பாடல் இணைந்த பெருங்காட்சிப் பண்பு நிறைந்த ஆற்றுகை வடிவம்.
- ஆற்றுகையின் போது நடிகர்கள் கூத்தர்களாகவும், அதிமானிடர்களாகவும் அவ்வப்போது சென்று வருவர்.
- தெருக்கூத்தின் வகை, ஆற்றுகை முறைமை, அரங்கு, பார்ப்போர் உறவு போன்றன விளக்குதல் வேண்டும்.
- தெருக்கூத்தில் புரிசை கண்ணப்ப தம்பிரான், மு. இராமசுவாமி, நா. முத்துசாமி போன்றோரின் பங்களிப்பு முக்கியம் பெறும் முறைமை.

(05 புள்ளிகள்)

iii. **குளிர்த்திச் சடங்கு**

- கிராமங்களில் சடங்கு சார் நம்பிக்கை மேலோங்கிய சூழலில் நிகழ்த்தப்படுகின்றது.
- நம்பிக்கை, மழை வேண்டுதல், நோய்களைத் தீர்த்தல் என்பன இதன் நோக்கமாக அமைகின்றன.
- நாடக மூலகங்களுடன் கூடிய நிகழ்த்துகை.
- குளிர்த்திப் பாடல்கள் பாடுதல், வாழி பாடுதல், பாணக்கம் வழங்குதல் என்பன இதன் முக்கிய நிகழ்வுகள்.
- பக்தி கலந்த இரசனை உணர்வுடன் கூடிய பார்வையாளர்களைக் கொண்டது.

இவை போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டு விடையளிக்கப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(05 புள்ளிகள்)

iv. **ரட்டயக்கும சடங்கு**

- சுகப்பிரசவம், குழந்தை வரம் வேண்டிச் செய்யப்படும் சிங்களச் சடங்கு.
- ஏழு மலட்டு இராணிகளின் கதை நிகழ்த்திக் காட்டப்படும்.
- நவமல்பயா என்ற இடத்தில் ஆற்றுகை இடம்பெறும்.

( இச்சடங்கினுடைய ஆற்றுகைக் கட்டங்களும், நாடகப் பண்புகளும், பார்ப்போர் துலங்கலும் விளங்கப்படுத்தப்படல் எதிர்பார்க்கப்படுகின்றது)

(05 புள்ளிகள்)

v. **மத்தியகால திருமறை நாடகங்கள்**

- திருவிவிலியத்தில் கூறப்பட்ட கதைகளைக் கருவாகக் கொண்டது.
- மறைஞான நாடகங்கள் என அழைக்கப்படும்.
- வணிக கில்டுக்களால், பாஸ்க்கா, நத்தார் காலங்களில் மேடையிடப்பட்டது.
- இயேசுப் பிறப்பு பாடுகள், இறப்பு, உயிர்த்தெழுதல் முறைகள் எடுத்துக் காட்டப்படும்.

(இதன் ஆற்றுகை வெளி, ஆற்றுவோர் பார்வையாளர் ஊடாட்டம் போன்றனவும் விளங்கப்படுத்தப்படல் எதிர்பார்க்கப்படுகின்றது.)

(05 புள்ளிகள்)

(மொத்தம் 3 × 5 = 15 புள்ளிகள்)